தி இந்து தமிழ் 18/03/2022

அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகத்தில்

# ராஜம்மாள் பா.தேவதாஸ் நினைவு சொற்பொழிவு

கோவை

அவிநாசிலிங்கம் மனையியல், மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் முன்னாள் நிர்வாக அறங்காவலரும், வேந்தருமான ராஜம்மாள் பா.தேவதாஸ் இருபதாம் ஆண்டு நினைவு சொற்பொழிவு நேற்று நடைபெற்றது. இதில், நிறுவனத்தின் மனையியல் புல முதன்மையர் ந.வாசுகி வரவேற்றார். நிறுவனத்தின் வேந்தர் ச.ப.தியாகராஜன் சிறப்புரையாற்றும்போது, "பல்கலைக்கழகம் உருவாக பெரும் பங்கு வகித்து அடித்தளம் இட்டவர் ராஜம்மாள் பா.தேவதாஸ். புதுமைப்பெண்ணாக நின்று ஊட்டச்சத்து துறையில் பெரும் புரட்சி செய்தவர் அவர்" என்றார். இதில், துணைவேந்தர் வை.பாரதி ஹரிசங்கர், பதிவாளர் சு.கௌசல்யா, முன்னாள் துணைவேந்தர் பிரேமாவதி விஜயன், ஸ்ரீ அவிநாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்களின் துணை நிர்வாக அறங்காவலர் கௌரி ராமகிருஷ்ணன், வணிகவியல், மேலாண்மையியல் துறை முதன்மையர் பி.சித்ராமணி, பேராசிரியர் கே.கன்னியம்மாள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.